நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 நாள். 24/03/2017ம் ஆண்டு மார்ச் மாதம் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற தென்காசி நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

வருகை தந்தவர் : திரு. பி. ஏகராஜ்,
தனிஅதிகாரி,
தென்காசி நகர்மன்றம்.

**மன்றப்பொருள் 1**

இந்நகராட்சி வார்டு எண். 32, மைனாப்பேரி தெருவில் உள்ள ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல்ஹதீஸ் நிறுவன பள்ளிவாசல் தலைவர் மஸ்ஜிதுத் தவ்ஹீத், தென்காசி என்பவர் மேற்படி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட இடுகாட்டிற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 வார்டு எண். 32, கதவு எண். 1பி1, மைனாப்பேரி தெரு, வரிவிதிப்பு எண்.162244 ஆக சொத்துவரி ஏற்படுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு.
2 மேற்படி இடுகாட்டிற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 67 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 2**

இந்நகராட்சி பகுதியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்ணம், குத்தகை போன்ற இனங்களில் நிலுவை வைத்துள்ளவர்களுக்கு E-Post மூலம் ரூ.5/– சலுகை கட்டணத்தில் (பேப்பர், பிரிண்டிங் செலவு உட்பட) அறிவிப்புகள் அனுப்ப தபால்நிலைய அதிகாரி, தென்காசி அவர்களின் கடிதம் வரப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி, நாகர்கோவில் நகராட்சி போன்ற அலுவலகங்களில் மேற்கண்டவாறு E-Post மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதாகவும் வருவாய் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். எனவே சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம், குத்தகை போன்ற இனங்களில் E-Post மூலம் வரிசெலுத்த வேண்டியவர்களுக்கு அனுப்பி 2016–17ம் ஆண்டுக்கான வரிவசூலில் 100 சதவீதம் வசூல் செய்ய வேண்டியது உள்ளது. எனவே ஒருபக்கத்திற்கு ரூ.5/– கட்டணத்தில் தபால்துறை வழியாக E-Post மூலம் அறிவிப்புகள் அனுப்பிட அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 2 | 2 | 68 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 3

இந்நகராட்சி வருவாய் பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. ஆர். மாரியப்பன், வருவாய் உதவியாளர் (த.ப.நீ) என்பவர் தன்னை மறுநுழைவு செய்யக் கோரிய சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண். டபிள்யூ பி. (எம்டி) எண். 15785/2016 ன் தீர்ப்பிற்கு சட்டக்கருத்துரை மதுரை அரசு வழக்கறிஞர் திரு.கே.பி.கிருஷ்ணதாஸ் அவர்களிடம் பெறப்பட்டது. மேற்படி சட்டக்கருத்துரைக்கான கட்டணம் ரூ.5000/– க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்

(432/2013/சி1)

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 3 | 3 | 69 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76 பி 6928 வாகனத்திற்கு தகுதிச் சான்று 12/04/2017ல் தகுதிச் சான்று முடிவடைவதால் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச செலவினம் ரூ.40,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மேற்படி உத்தேச செலவினம் ரூ.40,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி வாகனம் 15/02/2013ல் வாங்கப்பட்டுள்ளது. வாகனம் வாங்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகிறது.
3 அரசாணை எண். 983 நாள். 3/8/2004 உள்துறை (போக்குவரத்து) துறையின்படி ரூ.44,100/– மட்டுமே மேற்படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது.
4 மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(432/2013/சி1)

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 4 | 4 | 70 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 5**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76 பி 1483 வாகனத்திற்கு தகுதிச் சான்று 28/03/2017ல் தகுதிச் சான்று முடிவடைவதால் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச செலவினம் ரூ.19,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. மேற்படி உத்தேச செலவினம் ரூ.19,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனம் 03/03/2006ல் வாங்கப்பட்டுள்ளது. வாகனம் வாங்கப்பட்டு 11 ஆண்டுகளாகிறது.
3. அரசாணை எண். 983 நாள். 3/8/2004 உள்துறை (போக்குவரத்து) துறையின்படி ரூ.12,000/– மட்டுமே மேற்படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது.
4. எனவே கூடுதல் செலவினம் ரூ.7000/–க்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 5 | 5 | 71 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 6**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76 எப் 8885 வாகனத்திற்கு தகுதிச் சான்று 23/03/2017ல் தகுதிச் சான்று முடிவடைவதால் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச செலவினம் ரூ.55,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. மேற்படி உத்தேச செலவினம் ரூ.55,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனம் 29/03/2010ல் வாங்கப்பட்டுள்ளது. வாகனம் வாங்கப்பட்டு 6 ஆண்டுகளாகிறது.
3. அரசாணை எண். 983 நாள். 3/8/2004 உள்துறை (போக்குவரத்து) துறையின்படி ரூ.18,375/– மட்டுமே மேற்படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது.
4. எனவே கூடுதல் செலவினம் ரூ.36625/–க்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 6 | 6 | 72 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 7**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76ப்பி 6941வாகனத்திற்கு தகுதிச் சான்று 11.05.2017 ல் தகுதிச் சான்று முடிவடைவதால் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச செலவினம் ரூ.35000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மேற்படி உத்தேச செலவினம் ரூ.35000/—ஐ மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி வாகனம் 15.02.2013ல் வாங்கப்பட்டுள்ளது. வாகனம் வாங்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகிறது.
3 அரசாணை எண் 983 நாள் 03.08.2004 உள்துறை (போக்குவரத்து) துறையின் படி ரூ.44100 /— மேற்படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது/

ந.க.எண் 665/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 7 | 7 | 73 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 8**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்க்கொள்ள வீடு வீடாக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவற்றை அழிக்கவும் அபேட் மருந்து ஊற்ற தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்கள் 300 வீட்டிற்கு 1 நபர் வீதம் வாரத்திற்கும், 50 வீட்டிற்கு 1 நபர்வீதம் நாள்தோறும் பணி செய்யப்படவேண்டும் என சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 14.02.2017ம் தேதிய கடித ந.க.எண். 2571/ஜே1/2017 ன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தென்காசி நகராட்சி பகுதியில் 26000 வீடுகள் உள்ளன. எனவே 85 தற்காலிக பணியாளர்களை நியமனவும் செய்யவும், மேற்படி பணியாளர்களை ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை காலம் வரை பணியில் ஈடுப்படுத்தவும் மாவட்ட ஆட்சி த் தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும், நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மேற்படி 85 நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை பணியில் தேவைக்கேற்ப ஈடுப்படுத்தவும் , மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும் அதற்கான ஊதிய செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்க்கொள்ளவும் மன்றம்

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.666/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 8 | 8 | 74 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 9

தென்காசி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் 2017–2018 ம் ஆண்டிற்கு அதற்குறிய தேதிகளில் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. அரசாணை எண்.983 நாள்.03.08.2004 உள்துறை (போக்குவரத்து ) துறையின் படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாரதாரப்பிரிவு வாகனங்களுக்கு தகுதிச்சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு தகுதிச்சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.664/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 9 | 9 | 75 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**<u>மன்றப்பொருள் 10</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76 பி6928 வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைந்து விட்டதால், தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க் கொள்ள 14.3.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்தக்காரார் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகர் மோட்டார் ஓர்க்<br>31ஜி பாபநாசம் மெயின் ரோடு அம்பாசமுத்திரம். | ரூ.40380/– |
| 2 | ஸ்ரீமுருகன் மோட்டார் ஓர்க்ஸ்,3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. | ரூ.39580/– |
| 3 | மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ், 194 செங்கோட்டை ரோடு தென்காசி. | ரூ.40700/– |

அ.கு 1 பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முன்அனுமதிபெற்று பெறப்பட்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள ஸ்ரீ முருகன் மோட்டார் ஓர்க்ஸ், 3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளது. எனவே ஸ்ரீ முருகன் மோட்டார் ஓர்க்ஸ் தென்காசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

ந.க.எண்.575/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 10 | 10 | 76 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**<u>மன்றப்பொருள் 11</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டிப்பர் ஆட்டோ டி.எண்.76ப்பி1483 வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைந்து விட்டதால், தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க் கொள்ள 14.3.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகர் மோட்டார் ஒர்க்<br>31ஜி பாபநாசம் மெயின் ரோடு அம்பாசமுத்திரம். | ரூ.19915/– |
| 2 | ஸ்ரீமுருகன் மோட்டார் ஒர்க்ஸ்,3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. | ரூ.19000/– |
| 3 | மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 194 செங்கோட்டை ரோடு தென்காசி. | ரூ.20315/– |

அ.கு 1 பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முன்அனுமதிபெற்று பெறப்பட்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள ஸ்ரீ முருகன் மோட்டார் ஒர்க்ஸ்,3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளது. எனவே ஸ்ரீ முருகன் மோட்டார் ஒர்க்ஸ் தென்காசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

ந.க.எண்.573/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 11 | 11 | 77 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 12

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டிப்பர் டி.எண்.76எப் 8885 வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைந்து விட்டதால், தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்க் கொள்ள 14.3.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகர் மோட்டார் ஓர்க்<br>31ஜி பாபநாசம் மெயின் ரோடு அம்பாசமுத்திரம். | ரூ.49950/– |
| 2 | ஸ்ரீமுருகன் மோட்டார் ஓர்க்ஸ்,3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. | ரூ.48560/– |
| 3 | மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ், 194 செங்கோட்டை ரோடு தென்காசி. | ரூ.52900/– |

அ.கு 1 பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முன்அனுமதிபெற்று பெறப்பட்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள ஸ்ரீ முருகன் மோட்டார் ஓர்க்ஸ்,3/எஸ் பெருமாள் கோவில் தெரு தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளது. எனவே ஸ்ரீ முருகன் மோட்டார் ஓர்க்ஸ் தென்காசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

ந.க.எண்.574/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 12 | 12 | 78 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 13

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு உரக்கிடங்கினை ஜே.சி.பி இயந்திரம் மூலம் சமப்படுத்த 2017–2018ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டதில் 14/3/2017 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | 1 மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம். | ரூ.949/– |
| 2 | ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட்ஸ்,<br>ராஜபாளையம் | ரூ. 1050/– |

அ.கு 1 மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம்.ஒரு மணி நேரத்திற்கு ரூ.949/– என குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம். ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.113/2017/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 13 | 13 | 79 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு 2017–2018ம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினிகள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டதில் 14/3/2017 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தக்காரர் பெயர்மற்றும் முகவரி | நீர்த்த சுண்ணாம்பு (கிலோ1க்கு) | பிளிச்சிங்பவுடர் (கிலோ1க்கு | பினாயில் லிட்டர் 1க்கு |
|---|---|---|---|---|
| 1 | 0.1114 கடையநல்லூார் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூார் | ரூ.5.25பை | ரூ.31.75பை | ரூ.33.00பை |
| 2 | வலஜாபேட்டை விவசாய இஞ்சினியரிங் சர்வீஸ் கோ– ஆப்ரேடிவ் சென்டர் லிமிடெட் வலஜாபேட்டை | ரூ.6.80பை | ரூ.32.00பை | ரூ.60.00பை |

அ.கு 1 மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள0.1114 கடையநல்லூார் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூார் என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே .1114 கடையநல்லூார் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூார் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.4511/2016/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 14 | 14 | 80 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## மன்றப்பொருள் 15

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு 2017–2018ம் ஆண்டிற்கு தேவையான தளவாடசாமான்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டதில் 14/3/2017 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | தளவாடசாமான்கள் பெயர் | 0.1114 கடையநல்லூார் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூார் | வலஜாபேட்டை விவசாய இஞ்சினியரிங் சர்வீஸ் கோ– ஆப்ரேடிவ் சென்டர் லிமிடெட் வலஜாபேட்டை |
|---|---|---|---|
| 1 | மண்வெட்டி சிறியது | ரூ. 525 | ரூ.550 |
| 2 | மண்வெட்டி பெரியது | ரூ.565 | ரூ.580 |
| 3 | கடப்பாறை | ரூ.850 | ரூ.900 |
| 4 | குப்பை இழுக்கும் முள் கம்பி | ரூ.595 | ரூ.610 |
| 5 | துாப்புமார் (பெரியது) | ரூ.420 | ரூ.450 |
| 6 | கைமாறு | ரூ.35 | ரூ.45 |

| | | | |
|---|---|---|---|
| 7 | அரிவாள் | ரூ.490 | ரூ.500 |
| 8 | பிரம்பு கூடை | ரூ.450 | ரூ.475 |
| 9 | கால்வாய் கரண்டி | ரூ.650 | ரூ.675 |
| 10 | வாளி(பெரியது) | ரூ.390 | ரூ.410 |
| 11 | வாளி (சிறியது) | ரூ.370 | ரூ.400 |
| 12 | ஒட்டடை கம்பு | ரூ.125 | ரூ.150 |
| 13 | கால்வாய்முள்கரண்டி | ரூ.525 | ரூ.550 |

அ.கு 1 மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள0.1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூர் என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே .1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டக சாலை கடையநல்லூர் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.4382/2016/எச்1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 15 | 15 | 81 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<u>**மன்றப்பொருள் 16**</u>

இந்நகராட்சி வருவாய் பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. ஆர். மாரியப்பன், வருவாய் உதவியாளர் (த.ப.நீ) என்பவர் தன்னை மறுநுழைவு செய்யக் கோரிய சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண். டபிள்யூ பி. (எம்டி) எண். 15785/2016 ன் தீர்ப்பிற்கு சட்டக்கருத்துரை மதுரை அரசு வழக்கறிஞர் திரு.கே.பி.கிருஷ்ணதாஸ் அவர்களிடம் பெறப்பட்டது. மேற்படி சட்டக்கருத்துரைக்கான கட்டணம் ரூ.5000/— க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம் (432/2013/சி1)

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 16 | 16 | 82 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 17**

இந்நகராட்சியின் 2016–17ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2017–18ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 17 | 17 | 83 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 18**

தென்காசி நகராட்சி 2015–2016ம் ஆண்டு கணக்கு முடித்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கணக்கு 2015–2016ம் ஆண்டு தணிக்கை முடியும் வரை முழு ஒத்துழைப்பு செய்வதற்கான கூலி திரு. வி. சீனிவாசன் என்பவருக்கு ரூ.18,000/– (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (பி1/3152/2014)

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 18 | 18 | 84 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள் 19**

**திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016(தென்காசி நகராட்சி)**

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச்செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல்

குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் தென்காசி நகராட்சியை தூய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் பிரிவு 4ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

(1) கழிவுகள் உருவாக்கும் ஒவ்வொருவரும்

(a) உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவை, மக்காத தன்மை உள்ளவை, அபாகயகரமான வீட்டுகழிவுகள் எனத்தனிதனியே பிரித்து மக்கும் தன்மை உள்ள கழிவுகளினை பச்சைநிறக்கூடைகளிலும் மக்காத தன்மை உள்ள குப்பைகளினை வெள்ளைநிற கூடையிலும் அபாயகரமான வீட்டுக்கழிவுகளை கருப்பு நிறக்கூடையிலும் என 3 வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து நகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழங்கப்படவேண்டும். இது குப்பைகளினை உருவாக்குபவர்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகப்படுத்த வேண்டும்.

(b) சுகாதாரகழிவுகளான டயப்பர், நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழங்கப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ உலர் கழிவுகள் அல்லது மக்காத கழிவுகள் வைக்கப்படும் கூடையில் பிரித்து வைத்து வழங்கப்படவேண்டும்.

(c) கட்டுமான மற்றும் இடிப்புக்கழிவுகள் அவர்களது வளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்படவேண்டியதுடன் கட்டுமான மற்றும் இடிப்புக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இன் படி அகற்றப்படிவேண்டும்.

(d) தோட்டக்கலை கழிவுகள், பூங்காக்கழிவுகள் ஆகியவை அவர்களது வாளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்படவேண்டியதுடன் நகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைப்படி அகற்றப்படவேண்டும்.

(e) **தேவையற்ற கழிவுப்பொருள்களான தேங்காய் ஓடு,பயன்படுத்தாத ஆட்டுரல்,டயர்கள் உடைந்த பிளாஸ்டிக் பொருள்கள்,டயர்கள் ஆகியவற்றை தனிநபர்களோ அல்லது வணிகநிறுவனமோ ,தனியார் அலுவலகம்,அரசு நிறுவனம் எதுவும்** கொசுக்கள் உருவாகும் **வண்ணம் வைத்திருக்கக்கூடாது**.

(f) **பொதுஇடங்களில் சிறுநீர் கழித்தல்,திறந்தவெளி மலம் கழித்தல்,எச்சில் துப்புதல் போன்றவை** தண்டணைக்குரிய குற்றமாகும்

(2) குப்பைகள் உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற குப்பைகளினை தெருக்களிலோ, பெது இடங்களிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ. எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.

(3) குப்பைகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகளின் படி திடக்கழிவு மேலாண்மைக்குரிய பயனர் கட்டணம் செலுத்தவேண்டும்.(அட்டவணை–I)

(4) நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூடும் நிகழ்ச்சி மேற்கொள்ள 3 வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் நகராட்சியில் உரிய அனுமதி பெறவேண்டும். மேலும் நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பைகளினை தனித்தனியே பிரித்தே சேகரித்து வைப்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

(5) சாலைஒர வியாபாரிகள் தங்களது வியாபாரத்தின் மூலம் உருவாகும் உணவுக்கழிவுகள், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் தட்டுகள், டம்ளர்கள் தேங்காள் ஓடுகள், எஞ்சியிருக்கும் உணவு அழுகிய காய்கறிகள், பழங்கள் போன்ற குப்பைகளினை தெருக்களிலோ சாலை ஓரங்களிலோ அல்லது பொது இடங்களிலோ போடக்கூடாது. அவற்றை பிரித்து அதற்கேற்ற குப்பைதொட்டியில் சேகரித்து நகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் அல்லது கழிபுப்பொருள்கள் சேகரிப்பு நிலையத்தில் வழங்கப்படவேண்டும்.

(6) குடியிருப்போர் நல அமைப்புகள், சந்தை நலச்சங்கம் ஆகியவற்றைச்சார்ந்தவர்கள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்கும் குப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(7) 5000 ச.மீ மேல்பரப்பளவு கொண்ட குடியிருப்புவளாகங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(8) தினமும் 100 கிலோவிற்கு மேல் கழிவுகள் உற்பத்தி செய்யும் உணவு விடுதிகள் மற்றும் பிற நிறுவனங்கள், அலுவங்கள், விடுதிகள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி
உரமாகவோ அல்லது உயிரிவாயு செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பபவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(9) அனைத்துவகையிலான கழிவுபொருள்களையும் பேப்பர், தண்ணீர் பாட்டில்கள், காகித தண்ணீர் பாட்டில்கள், மது பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள், அழுகிய காய்கறிகள், பழங்கள், டம்ளர்கள் போன்றவற்றினை தெருக்களிலோ, பொது இடங்களிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது. தனித்தனியே விதிகளில் குறிப்பிட்டுள்ள வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து நகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழங்கப்படவேண்டும்.

**10. வளர்ப்புப் பறவை, மீன், இறைச்சிக்கொட்டில் கழிவு (நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில் சந்தைகள்தவிர்த்து மற்ற எல்லா பகுதியிருந்தும்)**

நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில்களும் சந்தைகளும் தவிர வணிகச் செயல்பாடுகள்

விளைவாக வளர்ப்புப்பறவை, மீன், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் ஏற்படுத்தும் வளாகங்களின் உரிமையாளர்/தங்கியிருப்போர் கழிவுகளை தனித்தனியாக மூடியவகையில் சுகாதார தன்மையுடன் சேர்த்து நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் இதற்காக அளிக்கப்பட்டுள்ள தென்காசி நகராட்சியின் பெறுதல் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வகைக் கழிவுகளைச் சமுதாய கழிவுத் தொட்டியில் கொட்ட தடை உள்ளது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

**11. விற்பனையாளர்/கூவி விற்போர் :**

விற்பனையாளர்/ கூவி விற்போர் அனைவரும் தங்கள் விற்பனை செயல்பாடுகளால் கழிவு ஏதாவது உருவானால். உயிரி மக்கும் மற்றும் பிற கழிவுகளை ஒன்று சேர்க்காமல் போட கொள்கலன் / தொட்டியை விற்பனை செய்யும் இடத்தில் வைக்க வேண்டும். கழிவுகளைச் சரியாகப் பிரித்து கொள்கலன் பொருந்திய கைவண்டியில் அல்லது அருகிலுள்ள சமூகக் கழிவு சேகரிப்புத் தொட்டியில் ஒப்படைக்க வேண்டியது கழிவு உருவாக்குவோர் / விற்பனையாளர் பொறுப்பு ஆகும். இவ்வாறு செய்யவிலை என்றால் அபராத அட்டவணையின்படி தண்டம் கட்ட வேண்டி வரும். விற்பனையாளர் / கூவிவிற்போர் அனைவரும் தங்கள் இடத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் தூய்மையாக வைக்க வேண்டியது தங்கள் பொறுப்பு ஆகும்.

**12. வீட்டு நீர்க்கால்:–**

உரிமையாளர் / தங்கியிருப்போர் தன் / தம் வளாகங்களின் வீட்டு நீர்க்காலில் கழிவு எதுவும் குவிக்கப் படாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் ,குப்பையைப் பிரித்து தென்காசி நகராட்சி அல்லது முகமையால் அளிக்கப்படும் கழிவு சேகரிக்கும் வாகனத்தில் ஒப்படைப்பதும் தங்கள் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய தவறுவது அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

**13. சொந்த/ செல்ல விலங்கால் ஏற்படும் குப்பை:**

தெருவில் அல்லது பொது இடங்களில் வளர்ப்பு விலங்குகளை அலைந்து திரியவிடக்கூடாது.மேலும் தெருவில் அல்லது பொது இடங்களில் வளர்ப்பு விலங்கால் ஏற்படும் கழிவை வழித்தெடுத்தல் /தூய்மையாக்கல் உரிமையாளரின் பொறுப்பு ஆகும். இவ்வகைக் கழிவைச் சரியாக அப்புறப் படுத்த தங்கள் சொந்த கழிவுநீர் அமைப்பால் போதுமான அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய தவறினால் அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

14. **இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்**

இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை –1 ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

15. **தண்டனை**

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின்அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

**திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம்**

**அட்டவணை–I**

| வ. எண் | பொருள் | காலம் | கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| **I.குடியிருப்பு** | | | |
| அ | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி – 6 மாதத்திற்கு ரூ.500க்குள்) | மாதம் | 10/- |
| ஆ | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி– 6 மாதத்திற்கு ரூ.501– 1000க்குள்) | மாதம் | 20/- |
| இ | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி– 6 மாதத்திற்கு ரூ.1001– 2000க்குள்) | மாதம் | 30/- |
| ஈ | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி – 6 மாதத்திற்கு ரூ.2001 மேல்) | மாதம் | 50/- |
| **2. நிறுவனம்** | | | |
| அ | தனியார் நர்சரி மற்றும் ஆரம்ப பள்ளி | மாதம் | 100/- |
| ஆ | தனியார் பள்ளி/ கல்லூரி விடுதி/ தனியார் அலுவலக வளாகம் | மாதம் | 250/- |
| இ | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் | 1000/- |
| ஈ | கிளினிக் | மாதம் | 200/- |
| **3. வணிகம்** | | | |
| அ | டீ ஸ்டால்/சிற்றுண்டி/ஐஸ்கிரீம்/பழச்சாறு/சலூன் கடை | மாதம் | 50/- |
| ஆ | நடமாடும் உணவகம் | மாதம் | 100/- |
| இ | உணவகம் சிறியது | மாதம் | 150/- |
| ஈ | உணவகம் பெரியது/ | மாதம் | 1000/- |
| உ | அடுமனை/ இனிப்பகம் | மாதம் | 500/- |
| ஊ | வணிக வளாகம் | மாதம் | 500/- |
| எ | (i)திருமண மண்டபம் (பெரியது)<br>(ii)திருமண மண்டபம் (சிறியது) | நிகழ்வு ஒன்றுக்கு | 1000/-<br>500/- |

| | | | |
|---|---|---|---|
| ஏ | தையல் கடை/சிறிய மளிகை/ பாத்திர கடை | மாதம் | 50/- |
| ஐ | இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் | 50/- |
| ஒ | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை( மூன்று சக்கரத்திற்கு மேற்பட்டவை) | மாதம் | 250/- |
| ஓ | தேங்காய்/ பூ/ பழம்/ காய்கறிகள் வியாபாரம்/ | மாதம் | 250/- |
| ஔ | காயலான்கடை | மாதம் | **500** |
| க | பல சரக்கு/ஸ்டேசனரி/ மருந்தகம்/புத்தகம்/ பெயிண்ட்/ ஆயில் விற்பனை | மாதம் | 100/- |
| **4.மற்றவை** | | | |
| அ | மட்டன்/சிக்கன்/மீன் ஸ்டால்/அச்சகம்/டிஜிட்டல் பேனர் | மாதம் | 50/- |
| ஆ | (i)சினிமா தியேட்டர்/பெட்ரோல் பங்க்<br>(ii)தியேட்டர் வளாகங்கள்(CINI COMPLEX) | மாதம்<br>மாதம் | 250/-<br>1000/- |
| இ | ஜவுளி கடை வியாபாரம்/தங்கும் விடுதி | மாதம் | 250/- |
| ஈ | தோல் பை விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை | மாதம் | 50/- |
| உ | மரக்கழிவுகள்/வாள்பட்டறை/டிம்பர் மார்ட் | மாதம் | 100/- |
| ஊ | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 250/- |
| எ | வீட்டுத் தோட்டக் கழிவுகள் மற்றும் நிகழ்ச்சி கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 250/- |
| ஏ | (i)பொருட்காட்சி<br>(ii)சர்க்கஸ் | நாளொன்றிற்கு<br>நாளொன்றிற்கு | **250**/-<br>**100**/- |
| ஐ | எலக்ட்ரிக்கல்/ எலக்ட்ரானிக்ஸ் | மாதம் | 100/- |
| ஒ | பொதுக்கூட்டம் நிகழ்ச்சி | மாதம் | 5000/- |
| ஔ | இதர இனங்கள் | மாதம் | 250/- |

**திடக்கழிவு மேலாண்மை அபராதக்கட்டணம்**
**அட்டவணை–II**

| **வ. எண்** | **துணை விதிகள்** | **துணை விதி விளக்கம்** | **சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை** |
|---|---|---|---|
| 1 | 4(1)(a) | <u>குப்பைகளை பிரித்து வழங்காமல் இருத்தல்</u><br>(i)வீடுகள்<br>(ii)வணிக நிறுவனங்கள்<br>(iii)வணிக வாளகங்கள்<br>(iv)உயிரி மருத்துவகழிவை பிரித்து திருத்தம் செய்யாமல் ஒப்படைத்தல் | 50/-<br>100/-<br>200/-<br>1000/- |
| 2 | 4(1)(b) | சுகாதாரக்கழிவுகளை பிரித்து சுகாதாரமான முறையில் வழங்காமல் இருத்தல் | 50/- |
| 3 | 4(1)(c) | கட்டுமான மற்றும் இடிப்பு கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் இருத்தல் | 500/- |
| 4 | 4(1)(d) | தோட்டக்கலை கழிவுகள், பூங்காகழிவுகள் முறையாக அகற்றபடாமல் இருத்தல் | 100/- |
| 5 | 4(1)(e) | (i)தேவையற்ற கழிவுப்பொருகளை தண்ணீர் தேக்கமடைந்து கொசுப்புழு உருவாகும் வகையில் வைத்தல் | 100/- |

| | | | |
|---|---|---|---|
| | | (ii)தொடர் குற்றங்களுக்கு | 500/- |
| 6 | 4(1)(f) | (i)பொது இடங்களில் துப்புதல்<br>(ii)பொது இடங்களில் சிறுநீர் கழித்தல்<br>(iii)திறந்த வெளியில் மலம் கழிதல் | 100/-<br>100/-<br>200/- |
| 7 | 4(2) | (i)பொதுஇடங்களில் குப்பைகளை எறிதல் (தனியார்)<br>(ii)பொதுஇடங்களில் குப்பைகளை எரித்தல் (தனியார்)<br>(iii)பொதுஇடங்களில் குப்பைகளை எறிதல் (வணிக நிறுவனம்)<br>(iv)பொதுஇடங்களில் குப்பைகளை எரித்தல் (வணிக நிறுவனம்) | 100/-<br>100/-<br>200/-<br>200/- |
| 8 | 4(4) | பொதுக்கூட்டம் நிகழ்ச்சிக்குப்பின் சுத்தம் செய்யாமல் இருப்பது பிரித்து வழங்காமல் இருப்பது | 2500/- |
| 9 | 4(5) | சாலை ஒர வியாபாரிகள் கழிவை பிரித்து வழங்காமல் இருத்தல் | 200/- |
| 10 | 7.1 | மீன்/ வளர்ப்புபறவை ஆகியவற்றின் கழிவை குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒழுங்கு செய்யாமல் ஒப்படைத்தல் | 1000/- |
| 11 | 7.2 | கொல்கலன்/குப்பைகூடை இல்லாத விற்பனையாளருக்கு /கூவி விற்பவர்களுக்கு | 200/- |
| 12 | 7.3 | வீட்டு நீர்காலினை தூய்மையாக வைக்காததற்கு | 1000/- |
| 13 | 7.4 | (i)விருப்ப/சொந்த விலங்கால் ஏற்படும் கழிவை சரியாக அப்புறப்படுத்தாதற்கு<br>(ii)வளர்ப்பு விலங்குகளை தெருவில் பொது இடங்களில் அலைந்து திரிய விடுதல் | 500/-<br>500/-<br>நாளொன்றிற்கு |

இச்செயல்பாடுகள் அனைத்தும் 01.07.2017 முதல் அமுல்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலகக்குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

